# பெரியாழ்வார் அருளிச் செய்த
# பெரியாழ்வார் திருமொழி
# மூன்றாம் பத்து

## ஏழாம் திருமொழி - ஐயபுழுதி
## திருமாலினிடத்து ஈடுபட்ட தலைமகள் இளமை கண்டு நற்றாய் இரங்கும் பாசுரம்

** ஐய புழுதி உடம்பளைந்து * இவள் பேச்சும் அலந்தலையாய் *
செய்ய நூலின் சிற்றாடை * செப்பன் உடுக்கவும் வல்லள் அல்லள் **
கையினில் சிறு தூதையோடு * இவள் முற்றில் பிரிந்தும் இலள் *
பையரவணைப் பள்ளியானொடு * கை வைத்து இவள் வருமே 1

வாயில் பல்லும் எழுந்தில * மயிரும் முடி கூடிற்றில *
சாய்விலாத குறுந்தலைச் * சில பிள்ளைகளோடு இணங்கி **
தீயிணக்கு இணங்காடி வந்து * இவள் தன் அன்ன செம்மை சொல்லி *
மாயன் மாமணிவண்ணன் மேல் * இவள் மாலுறுகின்றாளே 2

பொங்கு வெண்மணல் கொண்டு * சிற்றிலும் முற்றத்து இழைக்கலுறில் *
சங்கு சக்கரம் தண்டு வாள் * வில்லும் அல்லது இழைக்கலுறாள் **
கொங்கை இன்னம் குவிந்தெழுந்தில* கோவிந்தனோடு இவளை *
சங்கையாகி என்னுள்ளம் * நாள்தொறும் தட்டுளுப்பாகின்றதே 3

ஏழை பேதை ஓர் பாலகன் வந்து * என் பெண்மகளை எள்கி *
தோழிமார் பலர் கொண்டு போய்ச் * செய்த சூழ்ச்சியை யார்க்குரைக்கேன்? *
ஆழியான் என்னும் ஆழ மோழையில் * பாய்ச்சி அகப்படுத்தி *
மூழை உப்பறியாதது என்னும் * மூதுரையும் இலளே 4

நாடும் ஊரும் அறியவே போய் * நல்ல துழாய் அலங்கல்
சூடி * நாரணன் போம் இடம் எல்லாம் * சோதித்து உழி தருகின்றாள் **
கேடு வேண்டுகின்றார் பலர் உளர் * கேசவனோடு இவளை *
பாடு காவல் இடுமின் என்றென்று * பார் தடுமாறினதே 5

பட்டம் கட்டிப் பொற்றோடு பெய்து * இவள் பாடகமும் சிலம்பும் *
இட்டமாக வளர்த்தெடுத்தேனுக்கு * என்னோடு இருக்கலுறாள் **
பொட்டப் போய்ப் புறப்பட்டு நின்று * இவள் பூவைப் பூவண்ணா என்னும் *
வட்டவார் குழல் மங்கைமீர்! * இவள் மாலுறுகின்றாளே 6

பேசவும் தரியாத பெண்மையின் * பேதையேன் பேதை இவள் *
கூசம் இன்றி நின்றார்கள் தம் எதிர் * கோல் கழிந்தான் மூழையாய் **
கேசவா என்றும் கேடிலீ என்றும் * கிஞ்சுக வாய் மொழியாள் *
வாசவார் குழல் மங்கைமீர்! * இவள் மாலுறுகின்றாளே 7

காறை பூணும் கண்ணாடி காணும் * தன் கையில் வளை குலுக்கும் *
கூறை உடுக்கும் அயர்க்கும் * தன் கொவ்வைச் செவ்வாய் திருத்தும் **
தேறித் தேறி நின்று ஆயிரம் பேர்த் * தேவன் திறம் பிதற்றும் *
மாறில் மாமணிவண்ணன் மேல் * இவள் மாலுறுகின்றாளே 8

கைத்தலத்துள்ள மாடழியக் * கண்ணாலங்கள் செய்து * இவளை
வைத்து வைத்துக் கொண்டு என்ன வாணிபம்? * நம்மை வடுப்படுத்தும் **
செய்த்தலை எழு நாற்றுப் போல் * அவன் செய்வன செய்து கொள்ள *
மைத்தட முகில்வண்ணன் பக்கல் * வளர விடுமின்களே 9

பெருப் பெருத்த கண்ணாலங்கள் செய்து * பேணி நம் இல்லத்துள்ளே *
இருத்துவான் எண்ணி நாம் இருக்க * இவளும் ஒன்று எண்ணுகின்றாள் **
மருத்துவப் பதம் நீங்கினாள் என்னும் * வார்த்தை படுவதன் முன் *
ஒருப்படுத்திடுமின் இவளை * உலகளந்தான் இடைக்கே 10

** ஞாலமுற்றும் உண்டு ஆலிலைத் துயில் * நாராயணனுக்கு * இவள்
மாலதாகி மகிழ்ந்தனள் என்று * தாய் உரை செய்ததனை **
கோலமார் பொழில் சூழ் புதுவையர் கோன் * விட்டுசித்தன் சொன்ன
மாலை பத்தும் * வல்லவர்கட்கு * இல்லை வரு துயரே 11

**பெரியாழ்வார் திருவடிகளே சரணம்**

---